## தேவை

யாழ்ப்பாணத்திருந்து கோண்டாவில் இ.போ.ச. டிப்போவுக்கும் இடையில் பலாலி வீதியில் பயிர்ச் செய்கைக்கு இரண்டு ஏக்கர் காணி தேவை. கற்பூமியானாலும் தொடர்பு கொள்ளவும்,

யாழ். நகருக்கும், யாழ். வளாகச் சந்திக்குமிடையில் பலாலி வீதியில் வீடொன்றுவிலைக்குத்தேவை கடித மூலம் தொடர்பு கொள்ளவும்.

சு. சபாரத்தினம்,

"ஈழநாடு' லிமிட், - யாழ்ப்பாணம்.

1007



★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

மலர்: 20 கார்த்திகை 27 முஹறம் 12 இதழ் 303

யாழ்ப்பாணம் புதன்கிழமை 13-12-78



Duplicating

ஆங்கிலத்திலும் தமிழிலும்

Notes, கேள்விப்பத்திரங்கள், குறிப்புகள் முதலியன

CYCLO-STYLE செய்யவும்

போட்டோஸ்டாட் பிரதிகளுக்கும்

சுப்பகனன் கொப்பி சேவிஸ்

13, நவீனசந்தை(மேல்மாடி)

யாழ்ப்பாணம்.



UNIVERSITY OF SRI LANKA JAFFNA RECEIVED PERIODICALS DIVISION LIBRARY


# ஒய்வுபெறும் ஒரு மாதத்தில் 'பென்ஷன்' கிடைக்கும்

## அமைச்சர் மொண்டேகு அறிவிப்பு; 1979முதல் அமுலுக்கு வருகிறது

(கொழும்பு)

"அரசாங்க ஊழியர்கள் தமது சேவையிலிருந்து ஓய்வுபெறும்பட்சத்தில் ஓய்வு பெற்ற ஒரு மாதகாலத்தில் அவர்களுக்குரிய 'பென்ஷன்' வழங்கப்படும். சேவையிலிருக்கும் பொழுது மரணம் சம்பவித்தால், ஒருவருட பணிக்கொடை அவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும்" என்று பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் மேஜர் மொண்டேகு ஜெயவிக்கிரம நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீடு குழுநிலை விவாதத்தில் அமைச்சர் நேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். புதிய திட்டங்கள் 1979 ஜனவரி மாதம் முதல் அமுலுக்கு வருமென்று குறிப்பிட்ட அமைச்சர் மொண்டேகு ஜெயவிக்கிரம தமதுரையில் மேலும் தெரிவித்ததாவது:

### தந்தை தொழில்

"பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் கோரப்பட்டிருக்கும் "தந்தை என்ன தொழில் பார்க்கின்றார்?" என்ற பகுதி இனிமேல் நீக்கப்படும்.

"பிறப்பு இறப்புப் பதிவுகள் இனிமேல் "மைக்ரோபிலிம்" மூலம் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### திருமண வயது

"திருமண வயது ஆண்களுக்கு 15லிருந்து 18 ஆகவும் பெண்களுக்கு 12லிருந்து 16 ஆகவும் உயர்த்தப்படும்.

"சாதியின் பெயரில் கிராமங்களுக்குப் பெயரிடும்முறை நீக்கப்படும். இவ்விஷயத்தில் பொதுமக்களின் ஒத்துழைப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

"மதத்தின் பெயரால் பல தடவைகள் திருமணம் புரிவது தடைசெய்யப்படும். ஆனால் இவ்விஷயத்தில் முஸ்லிம்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படும்

"சகல ஓய்வூதியம் பெறும் குடும்பத்தோருக்கும் புகையிரத "வாரண்ட்" வழங்கப்படும்.

### பெண்ணுக்கும் சமநீதி

"கணவன் வேலைசெய்யும் பட்சத்தில் மனைவி 'பென்ஷன்' பெற இப்பொழுது உரிமை அளிக்கப்பட்டுள்ளது. இதுபோல, மனைவி அரசவேலை செய்யும்பட்சத்தில் கணவனுக்கும், பிள்ளைகளுக்கும் பென்ஷன் கிடைக்க பெண்ணுக்கும் சம உரிமை கிடைக்க (மனைவிக்கும் பென்ஷன் கிடைக்க) வழிசெய்யப்பட்டுள்ளது.

"இத்திட்டங்கள் எதிர் வரும் ஜனவரி மாதம் முதல் அமுல்படுத்தப்படும்" என்றும் அமைச்சர் தெரிவித்தார். [ம]

## ஒரே நாளில் நூறுபேர் பலி!

(புதுடில்லி)

சட்டவிரோதமாகத் தயாரிக்கப்பட்ட மதுபானத்தை அருந்திய நூறு பேர் நேற்று துடிதுடித்து இங்கு மரணமானார்கள்.

இந்த "உள்ளூர் மதுபானத்தை அருந்திய 200 பேர் புதுடில்லியிலுள்ள ஒரு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

## சூருவளி பற்றி அச்சம்வேண்டாம்

### அவதானநிலையம் அறிவிப்பு

(கொழும்பு)

"இம்மாத நடுப்பகுதியில் நாட்டில் சூருவளி வீசும் அபாயம் எதுவும் இல்லை" என்று அவதான நிலையத்தின் உயர் அதிகாரி நேற்று அறிவித்துள்ளார்.

"சூருவளி வீசும் என்று பீதி கிளப்பப்பட்டுள்ளது. அஞ்சவேண்டிய அவசியம் எதுவும் இல்லை. டிசம்பர் மாத கடைசி வாரத்தில் கால நிலை சீராக இருக்கும். அதுவரை வட, கிழக்குப் பகுதிகளில், விட்டு விட்டு மழை பெய்யும்" என்று இலங்கை கால நிலை அவதான நிலைய அதிகாரி தெரிவித்துள்ளார்.

### மட்டுநகரில் வெள்ளம்:

## 2000பேர் வீடுகளிலிருந்து வெளியேறியதாக அறிவிப்பு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் பலத்த காற்றுடன் கடும்மழை பெய்து வருவதால் 2000 மக்கள் தத்தம் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

[6ம் பக்கம் பார்க்க]

## பதவி உயர்வுகளுக்கு சிங்கள தேர்ச்சி தடையாகக்கூடாது

(கொழும்பு)

"இன்று ஆட்சியில் இருக்கும் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் 1965ம் ஆண்டில் பதவியில் இருந்தபோது ஆாக்கப்பெற்ற சுற்றநிக்கைகள் எந்த அடிப்படையில் பாக்கப்பெற்றதோ, அதே அடிப்படையில் அமுல் செய்வதை உறுதி செய்யவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். பதவி உயர்வுகளை காலம் தாழ்த்தாமல் வழங்கவேண்டும். பழைய அரசு ஊழியர்களுக்கு 55 வயதுக்குப் பின்னர் சேவை நீடிப்பு வழங்கப்படும் பொழுது, சிங்களத் தேர்ச்சியை ஒரு காரணமாக வைத்து அதனை மறுக்கக் கூடாது"

இவ்வாறு, அரசாங்க ஊழியர்களின் சிங்களத் தேர்ச்சி சம்பந்தமாக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. மொண்டேகு ஜெயவிக்கிரமா கூட்டிய மகாநாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம்

### அமிர் கோரிக்கை

கேட்டுக்கொண்டார்.

அரசாங்க ஊழியர்களின் சிங்களத் தேர்ச்சி சம்பந்தமாகப் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. மொண்டேகு ஜெயவிக்கிரமாவினால் கூட்டப்பெற்ற இம்மாநாட்டில் கிராமியக் கைத்தொழில் அமைச்சர் திரு எஸ். தொண்டமான், நீதியமைச்சர் திரு. கே. டபிள்யு. தேவநாயகம், எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இம்மாநாட்டில் பழைய-புதிய ஊழியர்களின் சிங்களத் தேர்ச்சி தொடர்பாக 1965ம் ஆண்டு வெளியாகியுள்ள இறைச்சேரியின் 700ம், 701ம் இலக்கச் சுற்றுநிருபங்கள் தவறான வழியில் அமுல்செய்யப்படுவதை எதிர்க்கட்சித் தலைவர் திரு அமிர்தலிங்கம், பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சரின் கவனத

( 6-ம் பக்கம் பார்க்க)

### பாராளுமன்றத்தில் நேற்று

## யாழ். அரசாங்க அதிபருக்கு பரவலாகப் பாராட்டு

[கொழும்பு]


யாழ்ப்பாணம் அரசாங்க அரசாங்க திரு. திரு. லயனல் பெர்னாண்டோவுக்கு, நேற்று பாராளுமன்றத்தில், பாராட்டுதல்களும்புகழுரைகளும் பரவலாகத் தெரிவிக்கப்பட்டன.

### அமைச்சர் பாராட்டு

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் மேஜர் மொண்டேகு ஜெயவிக்ரம நேற்று பாராளுமன்றத்தில் உரைநிகழ்த்துகையில் ஒரு கட்டத்தில், யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் தக்கநேரத்தில், உரியநடவடிக்கைகளை மேற்கொண்டுசிறப்பாகப்பணியாற்றியுள்ளார்' என்று பாராட்டுத் தெரிவித்தார்.

### 'சிவா' பாராட்டு

'சிலதினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற அசம்பாவிதங்களைத் தடுத்துநிறுத்தி, சிறப்பான முறையில் சேவையாற்றிய யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. லயனல் பேர்னாண்டோவை இச்சபையில்பாராட்டுவதில் நான் பெருமையடைகிறேன்' என்று பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செலவினங்கள் மீதான குழுநிலை விவாதத்தில் நல்லூர் எம் பி திரு. எம. சிவசிதம்பரம் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.



அவர் தொடர்ந்து பேசுகையில், 'யாழ் அரசாங்க அதிபருக்கு யாழ்ப்பாண எம். பி. யின் துணைவியார் திருமதி யோகேஸ்வரன் தொலைபேசி

(6-ம் பக்கம் பார்க்க)

## கிராமாட்சிமன்ற அலுவலகம்

புலோலி.

# கேள்வி விளம்பரம்

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட கீழ்க்காணும் வேலைகளுக்கு சீல் வைக்கப்பெற்ற கேள்விகள் அரசாங்கத் திணைக்களத்திலோ, உள்ளூராட்சிச் சபைகளிலோ அல்லது கூட்டுத்தாபனங்களிலோ பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து 21-12-78-ந் திகதி பிற்பகல் (ஒரு) 1மணி வரைஎன்ஞல் ஏற்றுக்கொள்ளப்படும். தகுதி வாய்ந்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், கிராம அபிவிருத்திச் சங்கங்களும் விண்ணப்பிக்கலாம்.

கீழ் காட்டப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணைப்பணமும், கேள்விப்பத்திரப் பணமும் செலுத்தியதன் பேரில் 19-12-78-ந் திகதி பிற்பகல் 3-00 மணி வரை இவ்வலுவலகத்தில் வழங்கப்படும் கேள்விப்பத்திரத்திலேயே விண்ணப்பிக்கவேண்டும். கேள்விப்பத்திரப்பணம் மீளளிக்கப்படமாட்டாது. கேள்வியின் பிரதி 21-12-78-ந் திகதி பிற்பகல் (ஒரு) 1 மணிக்கு பிந்தாது யாழ். பிரதி உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டு. மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

| | அட்டவணை | கேள்விப் பிணைப் பணம் | கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|
| 1. | நூல் நிலையம் அமைத்தல் | 100-00 | 15-00 |
| 2. | கற்கோவளம் குடியேற்ற வீதி | 100-00 | 15-00 |
| 3. | முருகையன் கோவிலடி வாசிகசாலை வீதி | 100-00 | 15-00 |

ஒப்பம்
ச. கங்காதரன்,
நிர்வாகஸ்தர்,
கிராமாட்சி மன்றம், புலோலி.

5-12-78. 1052

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. ஈடு (1) 201

1. பொன்ராசா கைம்பெண் மறிக்றிற்ரு 11, அடம்பன் வீதி, யாழ்ப்பாணம்.

வழக்காளி

எதிராக

1. பொ. கனகசபை மகேந்திரராசாவும் பெண்
2. தாளினியும், 63, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.
தற்போது 281, கொற்ற ரோட்டு, பொறல்ல, கொழும்பு 3.

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் ஈடு 201-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1979-ம் வருஷம் ஜனவரி (15-1-79) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபாய் 3760/-ம் 22-8-76 தொடக்கம் 30-1-78 வரைக்கும் ரூபாய் 2000/க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 664-05 கொடுக்கவேண்டியிருப்பது.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டிக்குளி 'களவைக்காடு' மறுபெயர் 'அல்பிரட்வில்லா' நிலப்பரப்பு 16 (யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, 139) வீடும் எல்லை கிழக்கு கொன்வென்ற் வடக்கு டாக்டர் ஜெயரத்தினத்திற்கு உரிய ஆதனம், மேற்கு பழைய பூங்கா ரோட், தெற்கு கடற்கரை ரோட். இதில் சொரியலாக நிலப்பரப்பு 1.

இ. கனகரெத்தினம்,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

இராமுப்பிள்ளை ரோட்,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 1047

## வரி விளம்பரம்

### தேவை

யாழ்ப்பாணம் சகல பகுதிகளிலும் கன்வஸ் செய்து பொருட்கள் விற்பனை செய்யக்கூடிய பெண்கள் தேவை. கொமிஷன் விபரம் நேரில் பேசிக்கொள்ளலாம். 15-12-78க்கு முன் விண்ணப்பிக்கவும். 2,தாயன்மார்ரேட், நல்லூர். 1042

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

காலஞ்சென்ற இராமலிங்கம் பெண் நல்லம்மா நல்லூர் என்பவரது மரணசாதனத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. ரி/3105

1. கே. கந்தையா கணபதிப்பிள்ளையும் பெண்
2. செல்லம்மாவும் இருவரும் ஆடியபாதம் ரோட்டு, நல்லூர், யாழ்ப்பாணம். மனுதாரர்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணச்சொத்து நியாயாதிக்க வழக்கு மேலே பெயர் கொண்ட குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979-ம் ஆண்டு மாசி மாதம் 16-ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுத்தப்படுகின்றனர்.

1978-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 15-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

வரைதல்:
செ. மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணி. 1017

### விற்பனைக்கு

மாஜி பெர்குசன் 135 ராக்ரர் ரெயிலர் (ஐந்து ஆணி) ஒருமித்தும் தனித்தும் விற்பனைக்குண்டு. செல்வா ஸ்ரோர்ஸ், 2A, நவீனசந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1051

பற்றரி சார்ஜர் — ஜிறிப்ரன் இறக்குமதி செய்யப்பட்ட புதியது; தொடர்புகொள்ளவும். யந்திரம்ஸ், 138, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1050

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

(இல 84 அ — பிரிவுகள் 524, 532)

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற சின்னத்தம்பி பூபாலசிங்கம் பத்தவேனி, அச்சுவேலி. என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

1. இளையதம்பி சின்னத்தம்பியும்
2. பெண் மகேஸ்வரியும், பத்தவேனி, அச்சுவேலி. மனுதாரிகள்

மரணசாதன நியாயாதிக்கம்) இல. 3396

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979-ம் ஆண்டு தை மாதம் 26-ம் நாளன்று முற்பகல் 10 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

1978 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 27-ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. 1053


## நத்தார் பரிசு

பாட்டா பலரக பாதணிகள்

20% கழிவுடன்

விற்பனையாகின்றன

விரையுங்கள்

எஸ். பி. சாமி & கொம்பனி,

193, மின்சார நிலைய வீதி — யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7025


## இன்றைய இராசிப்பலன்

கார்த். மாதம் 27-ந் திகதி
புதன்கிழமை
(13-12-78)

**மேடம்:—** கடமை யாற்றுமிடத்தில் சிறப்பான இடம் கிடைக்கும். டாக்டர்கள் போற்றப்படுவார்கள். புதிய கண்டுபிடிப்புகளில் அதிக ஆர்வம் பிறக்கும்.

**இடபம்:—** வாழ்க்கையில் புதிரான நிலை தென்படும். சிநேகிதர் வழியால் கவலைகள் தோன்றக்கூடும். விவசாயிகளாயின் ஏமாற்றத்திற்கிடமுண்டு.

**மிதுனம்:—** கொள்வனவுகளில் நல்லதிருப்பம் ஏற்படும். கல்வித்துறையில் முன்னேற்றம் தென்படும். தாய்வழியால் நன்மைகள் வந்துசேரும்.

**கடகம்:—** கலையுலகம் சம்பந்தப்பட்டவர்களுக்கு புகழ் பரவும். சிலர் புதியவாகனத்தை கொள்வனவு செய்வதில் கவனம் செலுத்துவர். வாழ்க்கையிலும் வசந்தம் நிலவும்.

**சிங்கம்:—** தூரத்தும் பயணம் துயரம், தரலாம் வருமானத்தில் வீழ்ச்சி தென்படும். வைத்தியச் செலவுக்கிடமுண்டு, இன்று சிறுவருத்தம் வரினும் பெருமுறையில் கவனிக்கவும்.

**கன்னி:—** தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சி தென்படும். களஸ்திரவழியில் பொருள் வரவிற்கிடமுண்டு. களிப்பூட்டும் விருந்தொன்றும் கிடைக்கும்.

**துலாம்:—** அரசபயத்திற்கு இடமுண்டு. மின்னியல் பொறியியல் பகுதிகளில் கடமையாற்றுவோர் மிகவும் கவனம்செலுத்தவும் முன் எச்சரிக்கை நன்று.

**விருச்சிகம்-** வருமானத்தில் அபிவிருத்தி தென்படும். நினைத்ததைச் சாதிப்பதில் இன்று முன்னணியில் நிற்பீர்கள். பிதாவழிச் சுகத்திற்கும் இடமுண்டு.

**தனுசு:—** தொழில்துறையில் நன்மாற்றங்கள் ஏற்படும். நண்பர்கள் மூலம் புதிய தொடர்புகளுக்கிடமுண்டு. உற்சாகமான தினம்.

**மகரம்:—** கூட்டு வியாபாரத்தில் முன்னேற்றமுண்டு. கடமையில் ஆர்வம் பிறக்கும். டாக்டர்களாயின் செல்வாக்குப் பெருகும். நிம்மதியான தினம்.

**கும்பம்:—** பணவிவகாரத்தின்மூலம் பகை தோன்றலாம். கடன் வாங்கவும் நேரிடலாம்; தொழில் தொல்லை உண்டு. நிதானம் விரும்பத்தக்கது.

**மீனம்::—** குடும்பத்தில் சிறிய பூசல்கள் தோன்றி மறையும். அவசர முடிவின் மூலம் விரோதத்தைத் தேடிக்கொள்வீர்கள். கோபமும் அதிகரிக்கும். அமைதியுண்டு.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

### கைதடிமேற்கு ச. ச. நி நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெற்றபோது பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

போஷகர்: சி. சிவசுப்பிரமணியம், தலைவர்: நா. ஸ்ரீரங்கநாதன், உபதலைவர்: த. தம்பிராசா, செயலாளர்: இ. ஸ்ரீகுகஞானசோதி, உபசெயலாளர்: க. பூபாலசிங்கம், பொருளாளர்: சி. கதிர்காமநாதன், கணக்குப்பரிசோதகர்: சு. பேரின்பலிங்கம், நிலையப்பொறுப்பாளர்: க. சிதம்பரநாதன்.

நிர்வாகிகளாக 12 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள். [ஈ]


## 1979-ம் ஆண்டுக்கு ஒரு புதுமையான கலண்டர்

# ஆனந்தா வாரக் கலண்டர்

- ஒரு நல்ல கலண்டரில் நீங்கள் எதிர்பார்க்கக் கூடிய எல்லா விஷயங்களும் பிரம்மஸ்ரீ இரகுநாதையர் -வாக்கிய பஞ்சாங்கக் குறிப்புகளின்படி பதிக்கப்பெற்றுள்ளன.
- அரசாங்க, வங்கி, வர்த்தக விடுமுறைகள் யாவும் 'பளிச்'சென்று தெரியும்படி சிவப்பு மையினுல் அச்சிடப்பெற்றுள்ளன.
- அழகிய வண்ணப்படங்களுடன் கூடிய தடித்த மட்டையில் பொருத்தப்பெற்றுள்ளன.

### ஒரு கலண்டர் ரூபா 4-50 மட்டுமே!

தயாரிப்பு: ஆனந்தா புத்தகசாலை - யாழ்ப்பாணம். தொலைபேசி: 348

ஈழநாடு
The Eelanaadu

## சிங்களத் தேர்ச்சிப் பிரச்னை

அரசாங்க ஊழியர்களின் சிங்களத் தேர்ச்சி சம்பந்தமாக சென்ற புதன் கிழமை பொதுநிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. மொண்டேகு ஜெயவிக்கிரமா ஒரு மகாநாட்டைக்கூட்டியிருந்தார்.

1965ம் ஆண்டில் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியிலிருந்தபோது பழைய, புதிய ஊழியர்களின் சிங்களத் தேர்ச்சி சம்பந்தமாக இரண்டு சுற்றுநிருபங்களை வெளியிட்டிருந்தது 700ஆம் 701ஆம் இலக்கங்களைக் கொண்ட இந்தச் சுற்று நிருபங்கள் பழைய ஊழியர்களின் சேவை பற்றிச் சகல விஷயங்களிலும் விதிவிலக்களித்திருந்ததுடன் புதிய ஊழியர்களில் சில தரத்திலுள்ளவர்களுக்கும் சிங்களத் தேர்ச்சியில் விலக்களித்திருந்தது.

ஆனால் 1971ம் ஆண்டில் பதவிக்கு வந்த முன்னைய அரசாங்கம் இந்தச்சுற்று நிருபங்களைச் செயல்படுத்தவில்லை. இதேநிலை தொடர்ந்தும் இருந்துவருகிறது.

அமைச்சர் கூட்டிய மகாநாட்டில் இவைபற்றி எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் விரிவாக எடுத்துக்கூறி 'இப்போது ஆட்சியிலிருக்கும் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கமானது 1965ஆம் ஆண்டில் ஆட்சியிலிருந்தபோது ஆக்கப்பெற்ற இச் சுற்றறிக்கைகள் எந்த அடிப்படையில் ஆக்கப்பெற்றதோ அதேஅடிப்படையில் அமுல் செய்வதை உறுதி செய்யவேண்டியது அரசின் கடமையாகும்' என்று சரியாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இவ் விஷயம் சம்பந்தமாக அமைச்சரவை தற்பொழுது பரிசீலனை செய்து வருகின்றதென்றும் விரைவில் ஒரு முடிவு எடுக்கப்படுமென்றும் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பதிலளித்ததுடன் எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துக் கூறிய சகல விஷயங்களையும் தனது அமைச்சு கவனமாகப் பரிசீலனை செய்து மந்திரிசபையின் கவனத்துக்குக் கொண்டு வந்து கூடிய விரைவில் இந்தச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதாக உறுதியுமளித்திருப்பது நம்பிக்கை அளிப்பதாகும்.

சிங்களத் தேர்ச்சி நிபந்தனையால் தகுதியும் திறமையும் அனுபவமும் உள்ள பல ஊழியர் முன்னேற்றம் பெறமுடியாமல் மனம் நொந்து தமது சேவையைச் சிறப்பாக நிறைவேற்ற முடியாமலுள்ளனர். பலர் வெளிநாடுகளில் வேலை வாய்ப்புத்தேடிச் செல்வதற்கும் இதுவும் ஒருகாரணமாகும்.

சில தினங்களுக்கு முன் கட்டுநாயகா விமானப் படைத்தளத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதி ஜயவர்த்தனாவிடம் சிங்களத்தேர்ச்சியின்மையால் தமக்கு எவ்விதபதவியுயர்வும் வழங்கப்படவில்லையென விமானப் படையின் தமிழ் வீரர் ஒருவர் எடுத்துக் கூறியிருந்தார்.

கடந்த பதினெட்டு வருடங்களாக விமானப்படையின் தொழில் நுட்பவியலாளராகக் கடமையாற்றி வருவதாகவும் சிங்களத் தேர்ச்சியின்மை காரணமாகத் தமக்கு எவ்வித பதவியுயர்வும் வழங்கப்படவில்லையென்றும் தம்முடன் வேலைக்கு வந்தவர்கள் இன்று உயர்பதவிகளில் இருக்கிறார்களென்றும் தொழில் நுட்பவியலில் கடமையாற்றும் தனக்குச் சிங்களத்தேர்ச்சி அவசியமில்லையென்றும் திரு. மயில்வாகனம் என்ற வீரர் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறியிருந்தார்.

'இது முக்கிய விவகாரம் இதுகுறித்து நாம் ஆராய்ந்துவருகிறோம் கூடியவிரைவில்கஷ்டத்தைநீக்குவோம்' என்று ஜனாதிபதி பதிலளித்திருக்கிறார்.

தமிழ் அரசாங்க ஊழியரின் கஷ்டத்தை அரசாங்கம் உணர்ந்துள்ளதென்பது பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சரினதும் ஜனாதிபதியினதும் பதில்களிலிருந்து அறியமுடிகிறது.

இதற்கு விரைவில் நல்லதொரு முடிவு கிடைக்குமென்ற நம்பிக்கையும் தோன்றுகிறது. இதேபோல் தமிழ்மக்களின் இதர பிரச்னைகளுக்கும் நல்லதொரு தீர்வுகிடைக்குமென்று நம்புவோமாக!

# புயல் இரவில் 25 ஜீவன்கள் அனுபவித்த துயரக்கதை

## தமது சொந்தஅனுபவத்தை எழுதுகிறார் எமது நிருபர் இரத்தினசிங்கம்

வவுனதீவுப் பகுதியில் வெள்ளம், காற்று இவற்றிலிருந்து அப்பகுதிமக்களைக் காப்பாற்றிவந்த கிராமிய நீதி மன்றமும், பாடசாலையும் இயற்கையின் சீற்றத்தால் கடந்த வாரம் புயல் அகதிகளுக்கு புகலிடமளிக்க முடியவில்லை. 23-11-78இரவு7மணிதொடக்கம் 10 மணிவரை வீசிய முதலாவது புயலிலேயே நீதிமன்றம் தரைமட்டமாகிவிட்டது பாடசாலைக் கூரையும் பிய்த்து எறியப்பட்டுவிட்டது. இதனால் வவுனதீவுப் பகுதி அகதிகள் புகலிடமின்றிப்பரிதவித்த காட்சிகண்டார்மனதை உருக்கிவிட்டது.

### 'கும்' இருட்டில் வெள்ளத்தினூடே...

புயல்வீசிய அன்றையதினம், புயல் ஆரம்பமானவுடன்நான் குடும்பத்திலுள்ள மொத்தம் 12 பேருடன் வழமைபோன்று கிராமிய நீதிமன்றக்கட்டிடத்தை நோக்கி 'கும்' இருட்டில் வெள்ளம் நிறைந்த வயல்களினூடாக மரங்களும் கிளைகளும் முறிந்து விழவிழ, மூன்று குழந்தைகளையும் சகோதரி, அவரது மக்கள் சிறுவர்கள், குழந்தைகள் ஆகியோரை இரு இடுப்பிலும் இறுக அணைத்துப் பிடித்தபடி சங்கிலித்தொடர் போல ஒருவர்பின்ஒருவராகச் சென்றோம்.

### பேய்மழையும் பயங்கரசூறுவளியும்

ஆனால் இடையில்தொடர்பு அறுந்துவிட்டது! கையிலுள்ளவர்களை காப்பாற்றினால்போதுமென்ற நம்பிக்கையுடன்இரண்டு குழந்தைகளுடன் அந்தக் கட்டிடத்தை 'ஆபற்பாந்தவனாக' எண்ணித் தஞ்சம் புகுந்தேன். இடைக்கிடை மின்னல் வெளிச்சத்தில் மற்றவர்களும் இடுப்பில் கட்டிய துணியுடன் கொடுகிக்கொண்டு நின்றனர். பேய் மழையும், பயங்கரசூறுவளியும் கைவரிசையைக் காட்டத் தொடங்கின.

"ஓ"...வென்ற பேரிரைச்சலுடன் வந்த காற்றினால் படபடவெனக் கதவுகள் பயங்கர ஓசையுடன் அடித்துக்கொண்டிருந்தன.

அந்தோ—

குடும்பத்தலைவனை வாடியில் விட்டுவிட்டு வந்த குடும்பமும், அவர்களது சிறுவர்களும் எம்முடன் இணைந்து கொண்டனர். சூறுவளி மேலும் சீறி எழுந்தது.

கும் இருட்டு...

கண்ணில் குத்தினாலும் தெரியாது.

இரண்டு கதவுகளில் ஒன்றை என்னுடன் இருந்த இளைஞனும நானும் காற்றினால் உடைந்துவிட்டால் தண்ணீர் நிறைந்துவிடுமென்ற பீதியில் முதுகைக்கொடுத்து பாதுகாத்துக்கொண்டு நின்றோம்.

### பயங்கரப் பேரொலி

படார்...பட...பட...படார்...

இப்படியொரு பயங்கரப் பேரொலி.

முப்பது ஆண்டுகளாகப் புகலிடமாக விளங்கிய அந்தநீதிமன்றக்கட்டிடம் இப்படியொரு நிலைக்கு வருமென எதிர்பார்க்கவில்லை - நம்பியிருக்கவில்லை.

கட்டிடத்தின் கூரை ஓடுகள் கழன்று எமதுதலைகளில் விழத்தொடங்கின குழந்தைகளின் கூக்குரல்...தாய்மாரின் அரோகரா...இவற்றுக்கு மத்தியில் 'இனிமேல் பிழைக்கமுடியாது. பக்கத்திலுள்ள கிணற்றில் குதித்துத் தற்கொலை செய்து உயிரை விடுவோம் அல்லது நச்சுத்திராவகத்தை அருந்தி இந்த ஊழிக் கொடுமையிலின்றும் விடுபடுவோம்' என்ற எண்ணமே எனக்கு உதித்தது.

ஓடுகள் இடைவிடாமல் வீழ்ந்துகொண்டிருந்தன. இரண்டுமேசைகள் நாம் புகுந்திருந்த அறையினுள் கிடந்தன. அந்த மேசையின்கீழ் 26 பேரைக் குந்தியிருக்கச்சொல்லிவிட்டு நாங்கள் உடைந்து விழுந்த ஓட்டுத்துண்டுகளைத் தலைகளில் வைத்துக்கொண்டு நின்றோம்.

### கோவெனக் கதறினர்

மரங்கள் விழும் சத்தங்கள் காதில் கேட்கவில்லை. சோ... சோ... என்ற காற்றோடு அந்தக் கட்டிடம் சரிந்து தரைமட்டமாகியது. எஞ்சியிருந்தவை எங்கள் குழந்தைகளும், கிராமசேவை அலுவலரின் அலுவலகமான அக்கட்டிடத்தினுள் கிடந்த காகிதாதிகளும்தான், வாழமுடியாது செத்துப் போவோமே என்ற கணவனை பிரிந்திருந்த தாய்மாரும், எனது சகோதரியும் கோவெனக் கதறியழப் பிள்ளைகளும் அழுதனர்.

### இப்படி ஒரு யுக்தி செய்தோம்

இன்னுமொரு இளைஞனை, கதவை முதுகினால் பின்புறமாகத்தள்ளும்படி கூறிவிட்டு, உடைந்துகிடந்த அந்தஅறைக் கதவைப் பக்கத்து வீட்டிலிருந்து எம்முடன் இருந்த நண்பனது உதவியுடன் தூக்கிப் பிடித்துக்கொண்டு சிலரை அதன் கீழ் இருக்கச் செய்தோம்.

மேலே இருந்து வந்த ஓடுகள் எம்மைப் பதம்பார்த்தன.

அந்த வளவில் நின்ற இரு பனைகளும் கட்டிடத்தில் விழ, அங்கு நின்ற மாமரமும் முறிந்துவிழுந்தது. நம்பிக்கையிழந்த எமக்கு அந்தக்கொடிய இருளில் ஒரு டோர்ச்லைட்டின் உதவியுடன் ஒருவரையொருவர் பார்க்கமுடிந்தது.

மூலைமுடுக்குகளில் உடைந்த ஓட்டுக்குவியல்கள். முழங்கால் வரையும் நீர். நீரினுள்இருந்து கொண்டு விம்மிவிம்மியழுதபடி தமது குழந்தைச் செல்வங்களை கட்டிப்பிடித்துக்கொண்டு குலதெய்வங்களுக்கு அரோகரா போட்டனர் தாய்மார்.

புயல், வெள்ளம்என்பதைப் பத்திரிகைகளில் படித்துவந்த எனக்கு சூறுவளிப் புயலின் கொடுமை தெரிந்தது கடந்த 23ம் திகதிதான்.

இரவு இரவாக வெளியேறிப் புகலிடம் தேடவேண்டிய நிலை ஏற்பட்டது. எல்லோரும் வெளியே போக முடியாது, போனால் காற்றில் அள்ளுண்டு போவதுமெய்.

எமக்கு உயிர்ப் பிச்சை அளிப்பது போல ஒளிகாட்டிய டோச் லைட்டின் உதவியுடன் பாடசாலைக்குள் போவோம் பார்த்து வாருங்கள் என்று எமது மற்றுமிரு நண்பர்களிடம் சொன்னேன்.

அங்கு சென்றவர்கள 15 பாகத்துக்குள் இருந்த பாடசாலையை பார்த்து வர அரை மணி நேரத்துக்கும் மேலாகியது போன இருவரும் வராதபடியால் என்ன நடந்து விட்டதோ என மேலும் பீதி ஏற்பட்டது.

### மயிலேறிவா முருகா எனக்கதறினர்

தமிழர் தெய்வமான முருகனை வேண்டிப் பலர் கூக்குரலிட்டனர். 'நாங்கள் தமிழரல்லவா முருகா மயில் ஏறி வா முருகா' எனக் காற்றுத் தணியும்வரை கூக்குரலிட்டனர். இரவு 10 மணியிருக்கும் மழையும் காற்றும் சொல்லி வைத்தது போல ஓய்ந்தன.

எனக்கும் ஒரு தெம்பும் நம்பிக்கையும் பிறந்தது. பாடசாலையில் புகலிடம் தேடிச் சென்ற இருவரும் வந்தனர். கட்டிடம் கூரைகள் பறந்து விட்டன என்று சொன்னார்கள்.

புயலுக்குப் பின் அமைதி ஏற்பட்டது, ஈரத்தை துடைத்துக் குளிர்காய வேண்டிய ஆயத்தங்களைப் பக்கத்திலிருந்த குடிசைக்குக் கூட்டிச் சென்று விட்டு உறவினர்களைப் பார்ப்போம் என கிராமத்துக்குள் கிளம்பினேன். இனம் காண முடியவில்லை,

### கோரவடிவில் மீண்டும் காற்று

மீண்டும் குளிர்காய ஆயத்தம் செய்த இடத்துக்குச் சென்றேன். 10 நிமிடமாகவில்லை, மீண்டும் காற்று கோரவடிவம் எடுத்தது. குளிர்காய்வதற்குச் சென்ற அந்தக் குடிசை மீண்டும் பிய்த்து எறியப்பட்டுவிட்டது. எல்லோரும் இறுகக் கட்டிப்பிடித்தபடி நீரினுள் குந்திக் கொண்

[5-ம் பக்கம் பார்க்க]

மணிவிளக்கு

உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்.

—யேசுநாதர்

### நாச்சிமார் கோவிலில் இன்று

# மங்களம் கொடுக்கும் மகாலட்சுமி பூஜை

-- ச. நாராயணசுவாமி --

மானிடராகப் பிறவியெடுத்த நாம் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் சதுர்வித புருஷார்த்தங்களை அடையவேண்டியது அத்தியாவசியம், உலகியல் வாழ்வுக்கு மிகவும் வேண்டற்பாலன முன்சொன்ன மூன்று புருஷார்த்தங்களாகிய அறம், பொருள், இன்பம் என்பவையும் அதன்பின் ஆன்ம ஈடேற்றத்திற்காக வேண்டற்பாலது மோக்ஷப்பேறுமாகும் இதுதான் ஞானவித்தையில் வீடு என்று சொல்லப்படுகின்றது

யாம் முன் ஜென்மங்களில் செய்த பூஜாபலத்தினால், தவமகிமையால், புண்ணிய சுகிர்தத்தினால் மானிடப்பிறவியை எடுத்துள்ளோம். இந்த ஜென்மத்தில் செயயும் காமிய கர்ம கலாபங்களால் இஷ்ட காம்யாதி சித்திகளைப் பெறுகின்றோம். தகுதியுடையவனுக்குத்தான் உலகில் வாழ்வு வளம்பெறும். தகுதியற்றவன் பின்தள்ளப்பட்டுவிடுகிறான்.

எனவே வாழ்க்கைப் பாதையில் யாம் முன்னேற நமது அபீஷ்டங்கள், மனோரதங்கள் நிறைவேற, போகபோக்கியங்களை நுகர அத்தியாவசியமான சாதனங்கள் மூன்று. அவை வீரம், செல்வம், கல்வி என்பனவாம். இந்த மூன்றும் இன்றேல் மானிட வாழ்வு பாலைவனமாகிவிடும். மூன்றில் ஒன்று குறைவுபடினும் யாம் வாழத் தகுதியற்றவர்களாகிவிடுவோம்.

இதைத்தான் எமது வேதமதமாகிய சனாதன தர்மம் வருடாவருடம் நவராத்திரிப் பெருவிழாவில் மாந்தர் குலத்திற்கு வலியுறுத்திக் கொண்டேயிருக்கிறது. நவராத்திரியில் வீரத்திற்கு அதிதேவதையான துர்க்கா பரமேஸ்வரியும் செல்வங்களுக்கு அதிதேவதையான மகாலக்ஷ்மியும் கல்விக்கு அதிதேவதையான சரஸ்வதியும் பூஜிக்கப்படுகின்றார்கள்.

பொருளிலார்க்கு இவ்வுலகில்லை, அருளிலார்க்கு அவ்வுலகில்லை என்பது வள்ளுவன் வாக்கு, செல்வம் இருந்தால்தான் வாழ்வின் சகல அம்சங்களிலும் சுகம்பெறலாம். நாம் அஷ்ட ஐஸ்வரியங்களுடனும் சகலசம்பத்துகளுடனும் வாழவேண்டுமானால் ஸ்ரீ மகாலக்ஷ்மியின்கிருபைவேண்டும். பால், பசு, தனதான்யங்கள், ஆரோக்கியம், நிறைந்த ஆயுள் இத்தியாதி சம்பத்துக்களுக்கெல்லாம் மஹாலக்ஷ்மி தேவியே இருப்பிடமானவள், எனவேதான் இந்தச்சம்பத்துக்களைப் பெறுவதற்காக மஹாலக்ஷ்மியை யாம் வேண்டுகிறோம். மாங்கல்யம், பாக்கியம், விவாஹசோபனங்கள் யாவற்றையும் அருள்செய்ய வல்லவள் அவளே ஸ்ரீமஹாலக்ஷ்மிதேவியின் அளவற்ற மகிமையும், சுகுணங்களும். கருணாலாவண்யங்களும் ரூப சௌந்தர்யமும் வேதசூக்தங்களாகிய ஸ்ரீசூக்தம் லக்ஷ்மீ சூக்தம் முதலியவைகளால் போற்றப்படுகின்றன.

எனவேதான் மக்கள் குலத்திற்கு மகளிர் சமுதாயத்திற்கு நலன்கள் பல வழங்கி வரங்கள் பல சிந்திக்க மாங்

[5ம் பக்கம் பார்க்க]



வெள்ள அனர்த்தம்:

# "புதுவாழ்வு அளிக்க அரசு சகலஉதவிகளும் செய்யும்"

## நீலகிரியில் முதல்வர் எம். ஜி. ஆர். உறுதி

சென்னை, டிச- 12

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நீலகிரி மாவட்டத்தை நேற்று நேரில் சென்று பார்வையிட்ட தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் பாதிக்கப்பட்டோருக்குபுதுவாழ்வு அளிப்பதில் தமது அரசு தாமதமின்றி சகல உதவிகளையும் வழங்கும் என்று உறுதியளித்தார்.

பாதிக்கப்பட்டகுடும்பங்களின்துயரங்களை அவர் பொறுமையுடன் கேட்டறிந்தார்.

நீலகிரி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சகல பகுதிகளையும் முதலமைச்சர் சுற்றிப் பார்வையிட்டார்;

### அரசின் உறுதி

மறுவாழ்வு அளிப்பதுபற்றி தீவிர கவனம் செலுத்தியுள்ள தமிழ்நாடு அரசு இயன்ற வரை எல்லா உதவிகளையும் அளிக்கும் என்று அவர் உறுதி தெரிவித்து ஆறுதல் கூறினார்.

### மக்கள் ஒத்துழைப்பு

புதிய வீடுகள் அமைப்பதற்கான அத்திபாரக்கற்களையும் அவர் நாட்டிவைத்தார்.

அரசு அளிக்கும் உதவிகள் முழுமையாகப் பயன்பட பொதுமக்கள் ஒத்துழைப்பும் அவசியம் என அவர் கேட்டுக் கொண்டார்.

முதலமைச்சருடன் இப் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்த விவசாயத்துறை அமைச்சர் திரு. பி. குழந்தை வேலுவும் அரசின் நிவாரணப் பணிகள் துரிதமாக நடைபெற பொதுமக்கள்ஒத்துழைப்பும் அவசியம் என்பதை வலியுறுத்தினர்.

### மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவிப்பு

மூன்று மாதங்களில் புதிய வீடுகள் அமைக்கப்பட்டு விடும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தர்மராஜன் தெரிவித்தார்.

முதலமைச்சர் இன்று ராமேஸ்வரம் மண்டபம் பகுதிகளுக்குச்செல்லவிருந்தார். [உ[

### வருட முடிவிற்குள் சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)

சமாதானநீதவான்களும் மொழிபெயர்ப்பாளர்களும் புதிய அரசியலமைப்புத்திட்டத்தின் கீழ் டிசம்பர் மாதம் 3ம் திகதிக்கு முன் சத்தியப் பிரமாணம்செய்துகொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [உ]

பரந்தனில்

### கடைஉடைத்துக் களவு

(கிளிநொச்சி)

பரந்தன் சந்தியில் உள்ள கடைஒன்று உடைத்து நகைகள் உட்பட பெறுமதிவாய்ந்த பலபொருட்கள் களவாடப்பட்டுள்ளன. 15000 ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளதாக கிளிநொச்சிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ)

# "யேசுபிரான் போதனை வாழ்வில் ஒளிதரும்"

[புலோலி]

'உலகில் வாழும் மனித குலத்தை இரட்சிக்க வந்துதித்த யேசுபிரானின் போதனைகள் வாழ்வில் ஒளியூட்டுவன "அன்பும் சமாதானமும் சன்மார்க்கமும் தெய்வீகமும் எம்மிடையே நிலவ வேண்டும் இதற்கு ஆண்டவனின் அருள் வாழ்க்கை எமக்கு வழிகாட்டுகின்றது. யேசுநாதர் எமக்குக் காட்டிய பாதையில் சென்றால் நாம் ஈடேற்றம் பெறமுடியும்''

இவ்வாறு பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்க உயர்கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெற்ற ''கிறிஸ்து அரசர்'' விழாவிற்குத்தலைமை வகித்து உரையாற்றிய கத்தோலிக்க ஆசிரியர் சங்க வடமராட்சிக்கிளைத் தலைவரும் கரவெட்டி திருஇருதயக்கல்லூரி அதிபருமான திரு தோமஸ் ஈப்பன் குறிப்பிட்டார்.

திருப்பலிப் பூசையுடன் ஆரம்பமான இவ்விழாவில் பலகலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன இறுதியில் கத்தோலிக்க ஆசிரிய வடமராட்சிக் கிளைச்செயலாளர் திரு. சி. வின்சென்ற் நன்றியுரை நிகழ்த்தினர். [உ]

### கைதிகள் தப்பியோட்டம்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து இருகைதிகள் தப்பியோடி விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

காத்தமுத்து சிவயோகராஜா வேல்முருகு என்ற இவ்விருகைதிகளையும் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. (உ)

### அபராதம்

(புலோலி)

பஸ்வண்டிகளில் மிதிபலகையில் நின்று பயணம் செய்யக் கூடாது என்ற கட்டளையை மீறி மிதிபலகையில் நின்று பயணம் செய்தஆறுநபர்களைப் பருத்தித்துறைப் பொலிசார் கைதுசெய்து பருத்தித்துறை நீதிபதி திரு. கே ஞானச்சந்திரன் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

இந்நபர்கள் ஆறுபேருக்கும் மிதிபலகையில் நின்று பிரயாணம் செய்த குற்றத்திற்காக தலா 50ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (உ)

# "பாரத - பிரிட்டன் நட்புறவு வலுவானது"

## சென்னையில் பிரி. தூதுக்குழு

சென்னை, டிச. 12

''பிரிட்டனுக்கும் பாரதத்திற்கும் இடையில் வலுவான நட்புறவு உண்டு'' என்று சென்னைக்கு விஜயம்செய்துள்ள பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் ஏழு உறுப்பினர்கள் கொண்ட தூதுக்குழு தெரிவித்தது.

இக் குழுவினருக்கு தமிழ்நாடு சட்டப்பேரவையும் மேலவையும் அளித்த விருந்துபசாரத்தில் உரைநிகழ்த்துகையிலேயே தூதுக்குழுவினர் இவ்வாறு கூறினர். பாரத பிரிட்டன் நட்புறவைப் பற்றி விமர்சித்த தூதுக்குழுத் தலைவர் திரு. லூஸி, பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலை தம்மை வெகுவாகக் கவர்ந்தது என்று சொன்னார். சட்டப்பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி பேசுகையில் ''பாரதத்துக்கு பிரிட்டனுடன் சரித்திரப் பிணைப்பு உண்டு'' என்று குறிப்பிட்டார்,

பாரதம் சுதந்திரம்பெற்ற காலம் முதல் ஜனநாயகத்தைப் பேணியே நடந்து வருகிறது என்றும் அவர் கூறினார்.

தூதுக்குழுவிற்கு நடராஜர் சிலை ஒன்றும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. (உ)

# "சமாதான உடன்படிக்கை ஏற்படுவது சாத்தியமே"

## இஸ்ரேலியப்பிரதமர் நம்பிக்கை

ஜெரூஸலம், டிச. 12

எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் சமாதான உடன்படிக்கை சாத்தியமாகும் என்ற நம்பிக்கை தமக்கு உண்டு என்று இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகின் தெரிவித்துள்ளார்.

ஆயினும் ஜோர்தானின் மேற்குக் கரையில் இஸ்ரேலியக் குடியேற்றத்தை கைவிடுவதா என்பது பற்றி அவர் எதுவும் குறிப்பிடவில்லை.

இரு நாடுகளுக்கும் இடையிலான சமாதானப்பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

பிரெஞ்சு ஜனதிபதி

# சகோதரர், ஜே. ஆர். - ஹமீதுடன் சந்திப்பு

(கொழும்பு)

பிரெஞ்சு ஜனதிபதியின் சகோதரர் திரு. ஜெஸ்பான் தற்போது இலங்கை விஜயம் ஒன்றினை மேற்கொண்டு வந்துள்ளார்.

அவர் நேற்று ஜனதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்தன, வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஸ்மித் ஆகியோரை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

வர்த்தகஅமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியையும் சந்தித்து அவர் இலங்கையின் சுதந்திர வர்த்தக வலயம்பற்றி பேச்சுவார்த்தை நடத்தவிருந்தார். (


# தமறோன் எல்.சி.60

ஒரு புதி அற்புதமான BAYER சர்வ பூச்சி நாசினி

குத்தும, உறிஞ்சும, கடிக்கும் அரிக்கும் எல்லாப் பூச்சிகளை அழிக்கும்.



## பயிரைப் பாதிக்கிறதா? வருவாயைக் குறைக்கிறதா?

பூச்சி, புழுக்கள் பயிரைப் பாதிக்காவண்ணம் பயிர்களைக் காத்து, அதிக பண லாபம் பெறும் வண்ணம் பல வருட நுட்ப ஆராச்சியின் திறமையினால் மேற்கு ஜெர்மனியில் இருக்கும் பேயர் ஸ்தாபனம்- விவசாயிகளின் கவலையை புதிய தமறோன் எல். சி. 60 கிருமி நாசினியால் உடனே தீர்த்து விடும். தற்பொழுது இலங்கையில் தயாரித்து விநியோகிப்போர் ஹேகெம் லிமிட்டெட்.

தமறோன் தெளித்தவுடன் தொடர்புக் கொல்லியாகவும், பயிர் சாற்றுடன் சேர்ந்து நீடியகாலம் தங்கும் சக்தி வாய்ந்த நாசினியாகவும் பயன்படுகிறது. குத்தும் உறிஞ்சும், பூச்சி, களான வெண் ஈ, திரிப்ஸ், தத்துக்கிளி, அழுக்கணவன், மயிறஸ், வண்டு ஆகியவற்றையும் கடித்துண்ணும் இலையரிப்புழு, அறக்கொட்டியான், கம்பளிப்புழு, இலை சுருட்டி ஆகிய பூச்சி புழுக்கள் எல்லாப் பயிர்களையும் பாதிக்காதுகட்டுப்படுத்தும் மிளகாய்-பொட்போரர் (கூறை துளை புழு) குருமண் நோய் ஆகியவற்றை அழிக்கும்.

மரக்கறிவகை- கொறவணைன புழு, அழுக்கணன், இலையரிப் புழு ஆகிய எல்லாப் பூச்சி புழுக்களை அழிக்கும். நெல், சந்துகுத்தி, இலை சுருட்டி ஆகிய எல்லாப் பூச்சி புழுக்களை அழிக்கும். பருத்தி, சோளன், கரும்பு, வாழை, திராட்சை ஆகிய பயிர்களிலும் பாவிக்கலாம்.

வேறு விபரங்களுக்கு;

## ஹேகெம் லிமிட்டெட்,

400, டீன்ஸ் வீதி, கொழும்பு-10.

தொலைபேசி: 93563 96321-6

நாகம்மஸ்
(கல்ஞகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி - சரோஜாதேவி
ஆலயமணி

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சிவாஜி - மஞ்சுளா
மன்னவன் வந்தானடி

சாந்தி (யாழ்நகர்) போன்: 7642
10-30, 2-30, 4-45, 7-00, 9-30
மணியான 3-வது வாரம்!
''பிளட்மணி'' பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத
ஓர் அரிய கராட்டிக் கலைப் பொக்கிசம்!
LEE VAN CLEEF... LO LIEH...
BLOOD MONEY (Scope - Color)

வின்ஸர் [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள் போன்: 466
6-வது வெற்றி வாரம்
ஓ சிவராம் ஓ சந்திரகலா ஓ தனரத்தினம் நடித்த
அநுராகம்
15-12-78 முதல்
பைலட் பிரேம்நாத்

மனோகரா [யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-ஜெயலலிதா-ஸ்ரீகாந்த் சுகுமாரி நடித்த
கணவன் மனைவி

ராஜா (யாழ்நகர்)
இன்று மட்டும்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - எஸ். எஸ். ஆர்.
கிரிஜா - ரி. ஆர். ராஜகுமாரி - கண்ணும்பா நடித்த
மனோகரா (புதிய பிரதி)

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சுஜாதா - கமலஹாசன் - சுமித்ரா
லலிதா

லிடோ [யாழ்.நகர்] போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
லொறி ட்றைவர்

REGAL (Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00 & 9-30 p.m.
RICHARD HARRISON in
Killers are Challenged

3-வது வாரம்!
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி - மாலினி - சந்திரபாபு நடித்த (இருவேடங்களில்)
சபாஷ் மீனா (புத்தம் புதிய பிரதி)

ராணி [யாழ். நகர்]
இன்று மட்டும்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - பத்மினி
வீரப்பா - தங்கவேலு நடித்த
விக்கிரமாதித்தன் (புதியபிரதி)
15-12-78 முதல் எம். ஜி. ஆர். நடித்த
இதயக்கனி

★ பலத்த காற்று ★ பேய்மழை

# கிழக்கின் கரையோரம், பொலநறுவ; தகவல் அறிவதில் தடை

## கடற்படை படகுகள் விரைவு

(கொழும்பு)

கிழக்குக் கரையோரப் பகுதிகளிலும் பொலநறுவ மாவட்டத்திலும் நேற்றுமுன்தினம் பலத்த காற்றுடன்கூடிய பெருமழைபெய்தது என்றும் இப்பகுதிகளுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன என்றும் நேற்றுக்காலை அறிவிக்கப்பட்டது.

தாழ்ந்த பகுதிகள் இங்கு வெள்ளத்தில் மூழ்கின என்றும் தற்போதைய நிலைபற்றி எதுவும் அறிந்துகொள்ள முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. வானொலித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன என்றும் கடல் கொந்தளிப்பு கிழக்கு மாகாணத்தில் தோன்றி சில கிராமங்களில் வெள்ளநீர் புகுந்துவிட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

### கடற்படைப் படகுகள் விரைவு

இதுபற்றி மேலும் அறிய வந்துள்ளதாவது: மட்டக்களப்பு வாவியின் நீர்மட்டம் அதிகரித்திருக்கிறது. கடல் அலைகள் உயர்கின்றன. பொலநறுவவுக்கும் கொழும்புக்கும் இடையிலான தொலைபேசித் தொடர்புகள் பலத்த காற்று மழையினால் துண்டிக்கப்பட்டுள்ளன.

பொலநறுவவிற்கு 4 படகுகளும், மட்டக்களப்புக்கு 2 படகுகளும் விரைந்துள்ளன என்று கடற்படை தெரிவித்தது. (உ)

உதைபந்தாட்டம்:

## இன்றைய மோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவில், யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்று வரும் உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியின் இன்றைய மோதலில் பாஷையூர் சென். அன்ரனிஸ் கழக 'ஏ' பிரிவும் அரியாலை ஐக்கிய கழகமும் மோதும்.

### நாளைய மோதல்

நாளைய மோதலில், குருநகர் பாடும்மீன் 'பி' பிரிவும் யாழ். முஸ்லிம்ஸ் சழகமும் மோதும்.

## புயல் இரவில்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

டோம்.

தங்கள் குழந்தைகளின் பிணத்தைத்தான் எனது சகோதரியும், பக்கத்து வீட்டு இரு சகோதரிகளும் நெஞ்சுடன் பற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணிக் கொண்டேன். அந்த வளவினுள் நாவல் மரமும் முறிந்து வீழ்ந்தது பக்கத்து வளவில் இரண்டு மூன்று மரங்கள் ஓரே நேரத்தில் மோதி வீழ்ந்தன.

தொடர்ந்தும் அங்கிருக்க மனம் கொள்ளவில்லை. பக்கத்து வீட்டுக்குச் சென்றோம் மண் சுவர் கரைந்து வீழ்ந்து கொண்டிருந்தது. நீரில் தோய்ந்து களி மண்ணினுள் புதையுண்டு கிடந்த பாய்களை எடுத்து தலைக்கு பிடித்துக் கொண்டோம்.

மரங்கள் தொடர்ந்து விழும் பயங்கர சத்தம். மரணத்தின் எல்லைக்கு சென்றுவிட்ட நிலையில் செத்தாலும் எல்லோருடனும் சாவோம் என்ற பீதியுணர்வுடன் மரங்களினூடாகவும், பற்றைகளினூடாகவும் சென்று மக்கள் கூட்டம் நின்ற தேநீர்கடையொன்றினுள் பூட்டப்பட்ட கதவை தட்டி நாங்கள் இருபத்தைந்து பேரும் உள்ளே சென்றோம்.

அரைமணி நேரத்தின் பின்னர் கோரப் புயலின் அகோரம் குறைந்தது. நேரம் 4 மணியிருக்கும்.

விடிந்தும் விடியாததுமாக வெளியே வந்தோம் புதிய உலகமொன்றில் யுத்தகால நிலைமைகளைப் படங்களில் பார்த்த நினைவும், சுடுகாட்டை யொத்த பயங்கர அமைதியும் காணப்பட்டது. (அ)

Rio (Jaffna)
Daily 4 Shows
Peter O'Toole in
MURPHY'S WAR
(Thrilling War film)

யாழ். பல்தொழில் நுட்ப

## கல்லூரிக் குறைபாடு பற்றி மகஜர் கையளிப்பு

(புலோலி)

''ஏனைய தொழில்நுட்பக் கல்லூரிகளில் கற்பிக்கப்படும் பல பயிற்சி நெறிகள் எமது பல்தொழில் நுட்பக்கல்லூரியில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. இதனால் ஜீ. சி. ஈ. (உயர்தர) பரீட்சையில் சித்தி அடைந்த பலர் உயர் கல்வி பெறமுடியாது உள்ளது. தடுத்துவைக்கப்பட்டு உள்ள பயிற்சி நெறிகளைத் தொடர்ந்து நடாத்தி மாணவர்களின் விரக்தியைப்போக்க வேண்டும்.'

இவ்வாறு யாழ். பல்தொழில் நுட்பக்கல்லூரியில் விசாரணை மேற்கொண்ட தொழில் நுட்பக்கல்லூரிகளின் விசாரணைக் கமிஷனிடம் கையளித்து உள்ள மகஜரில் மாணவர்கள் கோரியுள்ளனர்.

இம்மகஜரில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது: இப் பல்தொழில் நுட்பக்கல்லூரியில் கட்டிட வசதிகள் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றமையால் இதனைக்காரணம் காட்டி நிர்வாகத்தினர் தொழிற்கற்கைகளிலான தேசிய தராதரப் பத்திர நிர்வாகப் பயிற்சி நெறி வகுப்புக்களை நிறுத்திவைத்திருப்பதுடன், வேறு எந்தப்புதிய பயிற்சி நெறிகளையும் ஆரம்பிப்பதற்குப் பின்வாங்குகிறார்கள். ஆகவே புதிய கட்டிட வசதிகளை ஏற்படுத்தித்தர வேண்டும்.

மாணவர்களாவது தமது குறைநிறைகளைப் பரிமாறிக் கொள்ள ஒரு மன்றம் முக்கிய மானதாகக் காணப்படுகின்றது. ஆதலால் மாணவ மன்றத்தை அமைக்க அனுமதி வழங்கவேண்டும்.

தொழிற் கற்கைகளிலான தேசிய தராதரப் பத்திர சுருக்கெழுத்து, தட்டெழுத்து இருவருட பயிற்சி நெறியில் பயிலும் மாணவர்கள் தமது பயிற்சியை முடித்துப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தி அடைவது குறைவாகக் காணப்படுவதனால் இருவருடங்களை இப்பயிற்சி நெறியில் செலவுசெய்தும் பயன்அற்றுப் போகிறார்கள். எனவே இப் பயிற்சி நெறியை பயில்பவர்கள் சுருக்கெழுத்தாளர் தராதரப் பத்திர ஒருவருடப்பயிற்சி நெறியைப் பயிலும் மாணவர்கள் தோற்றும் பரீட்சையை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தால் அப்பயிற்சி நெறியிலாவது சித்திஅடையக்கூடிய வாய்ப்பு ஏற்படும்.

இத்தொழில் நுட்பக்கல்லூரியில் காணப்படும் தமிழ்த் அட்டச்சு இயந்திரங்களில் ஒன்றாவது திறமையாக இயங்குவது இல்லை. ஆதலால் புதிய இயந்திரங்களைப் பெற்றுத்தரவேண்டும். மாலையில் நூல்நிலையம் மூடப்பட்டுவிடுவதால் மாலைநேரப் பயிற்சி நெறிகளில் பயில்வோர் நூல் நிலையத்தை உபயோகிக்க வாய்ப்பு இல்லாது மாணவர்கள் கஷ்டம் அடைகிறார்கள்.

மாலைநேரப் பயிற்சி நெறியில் பயிலும் மாணவர்கள் காலையில் தொழில்நுட்பக் கல்லூரிக்கு வருவது அதிபரினால் தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் நிறுவனத்தில் கல்வி பயிலாத சில விரிவுரையாளர்களின் குடும்பத்தினர்வந்து ஏனைய விரிவுரையாளர்களுடன பொழுது போக்கிவருகின்றனர்.

பல்தொழில்நுட்பநிறுவனம் என்ற பெயரைத் தொழில்நுட்பக்கல்லூரியாக மாற்றுவதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஆலோசனை நடாத்தப்பட்டபோது இலங்கைத் தொழில் நுட்பக்கல்லூரியாகப் பெயர் மாற்றம் செய்து தரம் உயர்த்துவதாக உறுதி கூறப்பட்டது. ஆனால் இன்று வரையும் பெயரை மாற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.'' (உ)

## மங்கள...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

கல்யப்பேறுமுதலாகிய மங்களங்கள் மல்க யாழ்ப்பாணம் திருவண்ணையில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீகாமாக்ஷி (நாச்சிமார்) தேவியின் ஆலயத்தில் இன்று புதன்கிழமை மாலை 6 மணி முதல் முகூர்த்தமும் விரத பௌர்ணமியும் கூடிய சுப வேளையில் மஹாலக்ஷ்மி தீப பூஜையும், சுமங்கலிப் பிரார்த்தனையும் நடைபெறத் திருவருள்பாலித்துள்ளது. கன்னியர்கள், மங்கையர்கள், சுமங்கலிகள், சுகுமாரிகள் யாவரும்மேற்படி பூஜாகலாபங்களில் பங்குபற்றி ஸ்ரீமஹாலக்ஷ்மிதேவியின் அருட்பிரசாதம் பெற்று நீடூழிவாழப் பிரார்த்திக்கின்றோம்.

## தப்பியோடிய கைதிகள் சிக்கினர்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் வீசிய சூறுவளி, வெள்ள நிலைமையைப் பயன்படுத்தி மட்டக்களப்புச் சிறையிலிருந்து தப்பிச் சென்ற எட்டுக்கைதிகளும் மீண்டும் சிறைவைக்கப்பட்டனர்.

இவர்களில் நால்வரைப் பொலிசார் கைதுசெய்திருந்தனர். ஏனைய நால்வரும் சரணடைந்தனர். [உ]

## இவர்களுக்கும் விவாகப்படி

(கொழும்பு)

1974ம் ஆண்டுக்குப்பின் அரசாங்க சேவையில் சேர்ந்த ஊழியர்களுக்கு 1-1-79 முதல் விவாகப்படி வழங்கப்படும்.

இத் தகவலை பாராளுமன்றத்தில் நேற்று பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சூழ்நிலை விவாதத்தின்போது பேசுகையில் பிரதி அமைச்சர் திரு. பேர்சி சமரவீர வெளியிட்டார். [உ]

# கிணற்றுள் கிடந்தசடலம்; யார் என்று தெரியுமா?

[கொடிகாமம்]

சாவகச்சேரி பொலிஸ்பகுதியில் தோட்டக்கிணறு ஒன்றில் கிடக்கக் கண்டெடுக்கப்பட்டுள்ள ஆண் ஒருவரின் நிர்வாண மர்மச்சடலம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வரணி இயற்றாலை என்னுமிடத்தில் உள்ள தோட்டக் கிணறு ஒன்றில் இந்தச்சடலம் 7-11-78 பிற்பகல் கண்டெடுக்கப்பட்டது. நிர்வாணமாக இருகைகளும் ஷேர்ட்டினால் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்ட இவர் 30—35 வயதுக்குட்பட்டவர் என்றும் பொதுநிறமான சாதாரண உடற்கட்டுடையவ ரென்றும், 5 அடி 5 அங்குல உயரமுள்ளவரென்றும் பொலிசார் தெரிவித்தனர்.

இந்தபரது பிடரி, கழுத்து, நாடி ஆகிய பகுதிகளில் காயங்கள் காணப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டது.

இது ஒரு கொலை என நம்பும் சாவகச்சேரிப் பொலிஸார் இனந்தெரியாத இச்சடலம் பற்றித் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு பொதுமக்களைக் கோரியுள்ளனர்.

சாவகச்சேரிப்பொலிஸ் சார்ஜன்ற் திரு. மாசிலாமணி இதுபற்றிய புலன்விசாரணை மேற்கொண்டுள்ளார். [உ]

## இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

யாழ் சுகாதாரசேவை அத்தியட்சகர் அலுவலக கடன் சபைப் பிரதம லிகிதர் திரு. வி. என். கனகரத்தினம் யாழ். கச்சேரிக்கு 1-1-79 முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (உ)


## தேவை

### மாலுமி

மீன்பிடிப்பகுதியில் மாலுமிகளுக்கு வெற்றிடங்கள் உண்டு.

விண்ணப்பதாரிகள் 30 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவராய் இருத்தலோடு 5 வருடத்திற்குக் குறையாத கடல், மீன்பிடி அனுபவமுடையவராய் இருத்தல்வேண்டும். அத்தோடு உடல் திடகாத்திரம் உடையவராயும் இருத்தல்வேண்டும். விண்ணப்பதாரிகள், தமது வயது, கல்வி, அனுபவம் ஆகியவற்றை நிரூபிப்பதற்கான சான்றிதழ்களுடன் மார்கழி மாதம் 18ந் திகதி காலை 10 மணிக்கு காரைநகர் மீன்பிடிப்பகுதி அலுவலகத்தில் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பொது முகாமையாளர்,
சீ-நோர் அபிவிருத்தித் திட்டம்,
1054 காரைநகர்.

## தேவை

### தமிழ் சுருக்கெழுத்து தட்டச்சாளர்

தமிழ் சுருக்கெழுத்து தட்டச்சாளர் தேவை. திறமையும் அனுபவமும் உடையவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள்: கல்வி, அனுபவம், வயது, ஆகியவை குறிப்பிடப்பட்டு 18'ம் திகதி, மார்கழி மாதம், 78, அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
சீ-நோர் அபிவிருத்தித்திட்டம்.
1055 காரைநகர்.

## தேவை

### பயிற்சியாளர்

பதவிக்கும் பகுதியில் பல்வேறுதுறைகளில் பயிற்சிபெற விரும்புவோர் தமது விண்ணப்பங்களை மார்கழி 18 ம் திகதிக்கு முன்பாக கல்வி, வயது ஆகியவை பற்றி குறிப்பிட்டு அனுப்பிவைத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் ஜி. சி. ஈ. (சாதாரண) ல், விஞ்ஞான பாடங்களில் சித்தியடைந்திருத்தல்வேண்டும்.

பொது முகாமையாளர்.
சீ-நோர் அபிவிருத்தித் திட்டம்.
1056 காரைநகர்.


## 2000 பேர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அரசாங்கக் கட்டிடங்களில் இவர்களுக்கு தங்குமிடவசதி செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு உதவி அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

ஒட்டுச்சேனை உட்பட சில பகுதிகள் மட்டக்களப்புடன் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளன.

ஹெலிகொப்டர்கள் மூலம் 1900 இருத்தல் உணவுப் பொட்டலங்கள் நேற்றுபாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

இதனுள் வெள்ள நிவாரண வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இதேவேளை, ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்ததையடுத்து 20 லொறிகளில் கிடுகுகளை மட்டக்களப்புக்கு அனுப்பி வைத்துள்ளார். [உ]

## யாழ். அரசாங்க...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மூலம் அசம்பாவிதங்கள் குறித்து நடவடிக்கை எடுக்கும்படி பணித்திருந்தார். அரசாங்க அதிபர் உடனடியாக ஸ்தலத்திற்குவந்து நிலைமையை ஆராய்ந்து, கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார். காயப்பட்டவர்களையும் ஆஸ்பத்திரியில் சேர்த்து தனது கடமையைச் சிறப்பான முறையில் ஆற்றிபொதுமக்களின்பாராட்டைப் பெற்றுக்கொண்டார்'' என்றார்.

### 'அமீர்' கருத்து

எதிர்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் உரையாற்றுகையில், 'யாழ்ப்பாணத்துக்கு இப்படியொரு இளைஞரை அரசாங்க அதிபராக நியமித்தது பாராட்டப்படவேண்டியது. அவர் வடபகுதியின் அபிவிருத்தியில் நிர்வாகத் திறமையுடன் செயல்படுகிறார். பல அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வடபகுதி எம்.பி.க்கள் அனைவரையும் தாமாகவே அழைத்து அவர்களது ஆலோசனையும் பெற்று சிறப்பாகப் பணிபுரிகிறார். எனவே அவரைப் பாராட்டுகிறேன்'. என்றார். [ம]

## பதவி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திற்குக் கொண்டுவந்தார்.

1956ம் ஆண்டுக்கு முன் சேர்க்கப்பட்ட பழைய அரசாங்க தமிழ் ஊழியர் விடயத்தில் திறைசேரியின் 700ம் இலக்கச் சுற்றுநிருபமானது சேவை பற்றிய சகல விடயங்களில் முற்றாக விதிவிலக்களிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

பதவி உயர்வுகள், புலமைப் பரிசில்கள் ஆகியன வழங்கும் விடயத்தில் சிங்களத் தேர்ச்சி நிபந்தனை அறவே அனுசரிக்கப்படக்கூடாதென்று சுற்று நிருபத்தில் கோரப்பட்டிருந்த பொழுதிலும், இது நடைமுறையில் கையாளப்படவில்லையென்று எடுத்துக்காட்டப்பட்டது.

உதாரணமாக, பொது எழுதுவினைஞர் சேவையின் இரண்டாம் பிரிவு (அ) தரத்தைச் சேர்ந்தவர்களுக்கு முதலாந் தரம் பதவி உயர்வு வழங்குவதில் 1977ம் ஆண்டு வரை முன்னைய அரசாங்கம் சிங்களத் தேர்ச்சி நிபந்தனையை எவருக்கும் தெரியாத விதத்தில் சட்டவிரோதமாகப் புகுத்தி இருந்தமையையும் அது தொடர்பாகத் தனது கட்சி 6 ஆண்டு காலமாக எடுத்துவந்த நடவடிக்கைகளையும் எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துக் கூறினார். (ம)

(மிகுதி நாளை வெளிவரும்)

# காங்கிரஸ் வழக்கு

[நேற்றையத்தொடர்ச்சி]

வட்டுக்கோட்டை எம்.பி. திரு. ரி. திருநாவுக்கரசு தொடர்ந்து சட்டத்தரணி ஐக்குலின் செனிவிரத்னவால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டார்.

சட்: உப தலைவர்கள் 5 பேர்?-ஆம்

சட்: செயற்குழுக் கூட்டம் கூடும் காரணம் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்டிருந்தது?- ஆம்

சட்: முக்கிய உத்தியோகத்தர்கள் கட்சி நடவடிக்கையில் தவறிய காரணத்தால் கூட்டம் கூட்டப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது?-ஆம்.

சட்: அதில் கூறப்பட்ட குற்றச்சாட்டு, 3 மனுதாரர்களைச் சேரும்?- அவர்கள் கருத்துப்படி.

### பெரும்பான்மை உறுப்பினர்

சட்: செயற்குழுவில் பெரும்பான்மையான உறுப்பினர்களின் வேண்டுகோளின் படி அக்கூட்டம் கூட்டப்பட்டதா? ஆம்.

சட்: இணைக்காரியதரிசிகள் 3 பேர் கூட்டியுள்ளனர்?. ஆம்.

சட்: அதில் ஒருவர் பதில் செயலாளர்? ஆம்.

சட்: 3ம் எதிர் மனுதாரும் கையெழுத்திட்டுள்ளார். ஆம்.

சட்: 3 இணைச் செயலாளர்கள் கையெழுத்திட்டுள்ளனர்?- அப்படி பதவி இல்லை.

சட்: எதிர்மனுதார். ஏதாவது பதவிவகித்தாரா?- முக்கிய பதவி வகிக்கவில்லை.. கடைசி தேர்தல் 70 ம் ஆண்டு அவர் பதவிவகிக்கவில்லை.

சட்: அக்கூட்டம் பற்றி பத்திரிகையில் அறிந்திரா?- ஆம் 1ம், 2ம் மனுதாரர்களை சந்திக்கமுடியவில்லை. சுகவீனமுற்றிருந்தால் ஒரு கிழமைக்குப் பின்தான் சந்தித்தேன்.

### நடவடிக்கை தேவையில்லை

சட்: என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நினைத்திரா?-இல்லை. பொதுச்செயலாளர் கூட்டம் சட்டவிரோதம் என அறிவித்திருந்தார் இதற்கு மேல் நடவடிக்கை தேவையில்லையென்று கூறினார்.

சட்: 1ம் மனுதார் என்ன கூறினார்?- 2ம் மனுதார் கூறியதைச் சரியென்று ஏற்றார்.

சட்: கூட்ட அறிவித்தல் தனக்குக் கிடைத்ததாகக் கூறினாரா?-இல்லை.

சட்: சங்கரப்பிள்ளைக்குக் கடிதம் அனுப்பும்போது 1ம், 2ம் எதிர்மனுதார் நீக்கப்பட்டது தெரியும்?-பத்திரிகை மூலம் தெரியும்.

சட்: கூட்டத் தீர்மானம் தங்களுக்கு அனுப்பப்பட்டதாக 1ம் 2ம் மனுதாரர்கள் சொன்னார்களா?-இல்லை. 2ம் மனுதார் சொன்னார்களா? இல்லை.

சட்: செயற்குழுவில் வருடாந்த மாநாட்டை நவம்பர் 26ல் கூட்டுவதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது?-ஆம்.

சட்: அப்படியிருந்தும் நீங்கள் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை?- பொதுச்செயலாளர் வருடாந்த மாநாட்டைக் கூட்டப் போவதாகக் கடிதம் எழுதியிருந்தார்.

சட்: 1952-லிதமிழ்க்காங்கிரஸில் சேர்ந்ததாகக் கூறினீர்?- ஆம்.

சட்: 1960ம் ஆண்டில்தான் தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினராகச் சேர்ந்தீர்?- என்றால் சரியா?-இருக்கலாம். 1965-ல் இருந்துதான் பொருளாளராக இருக்கிறேன்.

சட்; 65க்குமுன் பொருளாளராக இருக்கவில்லையா?-ஞாபகமில்லை.

சட்: 1952ல் உறுப்பினராகவும், பொருளாளராகவும் இருந்ததாகக் கூறவில்லையா?- ஆண்டுசரியாகக் சொல்லமுடியாது.

சட்; நீர் 2ம் எதிர்மனுதார் சங்கரப்பிள்ளையினால்தான் கட்சியில் சேர்க்கப்பட்டீர்?- இல்லை.

சட்: அங்கத்தவராகச் சேர்ந்த ஆதேவருடம் பொருளாளரானீர்?- நிச்சயமாகச்சொல்ல முடியாது.

சட்: நீர் காங்கிரஸில் சேர்ந்தபோது, யார் யார் உத்தியோகத்தர்களாகஇருந்தனர்?- ஞாபகமில்லை. தலைவராக ஜி. ஜி. பொன்னம்பலம் இருந்தார்.

சட்: உபதலைவராக?- பலர் இருந்தனர்.

சட்: பொதுச்செயலாளர் இருந்தாரா?- இல்லை.

சட்: இணைச்செயலாளர்?- வழக்கிற்காக யாப்புப் படித்தபோது 3 இணைச்செயலாளர் உண்டு என்று அறிந்தேன்.

...

## காணிஅபிவிருத்தி இலாகா ரூ. 16கோடிவருமானம்

[கொழும்பு]

காணிஅபிவிருத்தி இலாகா கடந்தவருடம் 16 கோடி ரூபாவை சம்பாதித்துள்ளது.

தொழிலாளர்பிரிவு அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் அரசாங்க இலாகாக்கள் ஏஜென்ஸிகள் மூலம் இத்தொகை ஈட்டப்பட்டுள்ளது என்று காணிஅபிவிருத்தி இலாகா இயக்குநர் திரு. ஜே. எக்ஸ். ஆர். அந்தோனிப்பிள்ளை நேற்றுமுன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இத்தகவலை வெளியிட்டார். [உ]

'ஈழநாடு' ஆதரவுடன் ரோட்டரி ஆரம்பித்த

## சூறுவளி, வெள்ள நிவாரணநிதி

சூறாவளி வெள்ளத்தினால் பாதிப்புக்குள்ளான மக்களுக்காக யாழ்ப்பாணம் ரோட்டரிச் சங்கம் 'ஈழநாடு' ஆதரவுடன் திரட்டும் நிதிக்கு கடந்த 10ம் திகதிவரை கிடைத்த மொத்தத் தொகை ரூ. 8640-00.

| | |
|---|---|
| லயன் ஆர். சபாரத்தினம், வியாபாரிமூலை | 10-00 |
| திருமதி ஆர். சபாரத்தினம், வியாபாரிமூலை | 5-00 |
| திரு திருமதி எம். சின்னையா, வியாபாரிமூலை | 10-00 |
| கோ. மீனும்பிகை, வேம்படி மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம். | 5-00 |

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 62-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Telegram Eelanaadu Telephone 269, Registered as a Newspaper in Sri Lanka.